**ஜனவரி – 05**

# TNPSC துளிகள்

- காதி மற்றும் கிராம தொழிற்துறை ஆணையமானது (Khadi and Village Industries Commission - KVIC) தனது முதலாவது பட்டு பதப்படுத்தும் தொழிற்சாலையை குஜராத்தில் உள்ள சுரேந்திர நகர் மாவட்டத்தில் திறந்துள்ளது.
    - இது குஜராத் படோலா ரக புடவைகளின் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## 107வது இந்திய அறிவியல் மாநாடு

- பிரதமர் நரேந்திர மோடி 107வது இந்திய அறிவியல் மாநாட்டைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது கர்நாடகாவின் பெங்களூருவில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக் கழகத்தில் நடத்தப் பட திட்டமிடப் பட்டிருக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டுக்கான இந்த மாநாட்டின் கருப்பொருள் “அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்: ஊரக வளர்ச்சி” என்பதாகும்.
- முதன்முறையாக, இந்திய அறிவியல் மாநாட்டின் ஒரு பகுதியாக விவசாயிகள் அறிவியல் மாநாடு நடத்தப்பட உள்ளது.

### *இந்திய அறிவியல் மாநாடு*

- இந்திய அறிவியல் மாநாடானது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் வாரத்தில் இந்திய அறிவியல் மாநாட்டுச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது.
- அறிவியல்சார் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களின் பல்வேறு பகுதிகளின் மீது ஆர்வமுள்ள விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு இது ஒரு முக்கியமான சந்திப்பாக விளங்குகின்றது.
- இந்த மாநாட்டின் 106வது பதிப்பானது (முந்தைய அமர்வு) பஞ்சாபின் ஜலந்தரில் உள்ள லவ்லி தொழில்சார் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் முதலாவது கூட்டமானது 1914 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் உள்ள ஆசியச் சமூகத்தின் வளாகத்தில் நடைபெற்றது.

## மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் NEST பிரிவு

- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகமானது புதிய, வளர்ந்து வரும் மற்றும் உத்திசார் தொழில்நுட்பங்கள் (NEST - New, Emerging and Strategic Technologies) என்ற ஒரு பிரிவை அமைத்துள்ளது.
- இது புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை எதிர்கொள்வதற்கு உதவுகின்றது.
- மற்ற நாடுகளின் ஐந்தாம் தலைமுறை மற்றும் செயற்கை நுண்ணறிவுப் பகுதிகளுடன் பங்காளராவதற்கு NEST பிரிவு உதவுகின்றது.
- NESTன் கீழ், பல்வேறு நெட்வொர்க் நிறுவனங்களின் தரவுகளின் பகிர்வை மத்திய அரசு அனுமதிக்கின்றது. இதில் ஐந்தாம் தலைமுறை சோதனைத் திட்டத்தின் கீழ் ஹுவாய்

தனது வாடிக்கையாளர் விவரங்களை சீன அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்கின்றது.

- இந்தப் பிரிவானது புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்குள் ஒரு இடைநிலை நிறுவனமாகச் செயல்படுகின்றது.
- NEST பிரிவானது "தொழில்நுட்ப நிர்வாக விதிகள், தரநிலைகள் மற்றும் அமைப்பு" ஆகியவை பற்றியும் பேச்சுவார்த்தை நடத்துகின்றது.

### ரயில்வே உதவிமைய எண் 139

- ரயில் பயணங்களின் போது பயணிகளின் குறைகளை விரைவாகக் களைவது மற்றும் விசாரணைகளை விரைவாக மேற்கொள்வது ஆகியவற்றிற்காக இந்திய ரயில்வே நிறுவனம் 139 என்ற ஒரு ஒருங்கிணைந்த உதவி மைய எண்ணை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது ஏற்கனவே இருக்கும் உதவி மைய எண்களின் ஒருங்கிணைந்த வடிவமாகும் (குறிப்பாக 182 தவிர). இது பல உதவி மைய எண்களின் காலதாமதத்தைத் தவிர்க்கவும் ரயில் பயணத்தின் போது பயணிகளின் அனைத்துத் தேவைகளுக்கும் அவர்களை ரயில்வேயுடன் இணைக்கவும் வழிவகை செய்கின்றது.
- இந்த உதவி மைய எண் ஆனது 12 மொழிகளில் செயல்பட இருக்கின்றது.
- இது ஒரு ஊடாடும் குரல் எதிர்வினை (பதிலெதிர்ப்பு) முறையை அடிப்படையாகக் கொண்டது. மேலும் இதனைப் பொதுவான புகார்கள், விபத்துக்கள் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்படலாம்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### விண்வெளிக்கான நான்காவது பிராந்தியக் கல்வி மையம்

- இஸ்ரோ நிறுவனமானது விண்வெளிக்கான தனது நான்காவது பிராந்தியக் கல்வி மையத்தை (Regional Academic Centre for Space - RAC-S) மங்களூரில் உள்ள சூரத்கல் என்ற இடத்தில் உள்ள தேசியத் தொழில்நுட்ப கர்நாடக நிறுவனத்தில் அமைக்கின்றது.
- இந்த மையமானது இந்திய விண்வெளித் திட்டத்தின் எதிர்காலத் தொழில்நுட்ப மற்றும் நிரல் தேவைகளுக்கு பொருந்தக் கூடிய பகுதிகளில் ஒரு மேம்பட்ட ஆராய்ச்சிக்கு உதவுகின்றது.
- இது தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, பாண்டிச்சேரி மற்றும் லட்சத் தீவுகள் போன்ற தென் பிராந்தியங்களில் விண்வெளித் தொழில்நுட்பத்தை மேம்படுத்த உதவுகின்றது.
- இஸ்ரோ தனது முதலாவது RAC-Sஐ ஜெய்ப்பூரிலும் இரண்டாவது RAC-Sஐ குவஹாத்தியிலும் மூன்றாவது RAC-Sஐ குருசேத்திரத்திலும் அமைத்துள்ளது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### முதலாவது ஆமை மறுவாழ்வு மையம்

- நன்னீர் ஆமைகளுக்கான ஒரு வகையான மறுவாழ்வு மையமானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பீகாரில் உள்ள பாகல்பூர் வனப் பிரிவில் தொடங்கப்பட உள்ளது.
- அரை ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த மையத்தில் ஒரே நேரத்தில் 500

ஆமைகளுக்கு அடைக்கலம் கொடுக்க முடியும்.

- நோய்வாய்ப்பட்ட, கடுமையாகக் காயமடைந்த அல்லது கடத்தப்பட்ட ஆமைகளுக்கும் இந்த மையம் சிகிச்சையளிக்க இருக்கின்றது. பின்னர் அந்த ஆமைகள் அதன் இயற்கை வாழ்விடங்களுக்குப் பாதுகாப்பாக திருப்பி அனுப்பப்பட இருக்கின்றன.
- அணைகள் மற்றும் தடுப்பணைகள் ஆகியவற்றின் மூலம் இந்த இனங்களின் இழப்பு, மாசுபாடு, சட்டவிரோத வேட்டையாடுதல், மீன்பிடி வலைகள் மூலம் தற்செயலாக சிக்கிக் கொள்தல் மற்றும் அவற்றின் வாழ்விடங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் போன்றவற்றால் ஆமை இனங்கள் அதிக அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.

## பலாவு – சூரிய ஒளிக் கதிர்களிடமிருந்துப் பாதுகாப்பு அளிக்கும் பொருள்களுக்குத் தடை

- பசிபிக் தீவில் உள்ள ஒரு நாடான பலாவு நாடானது பவளப் பாறைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் சூரிய ஒளிக் கதிர்களிடமிருந்துப் பாதுகாப்பு அளிக்கும் பொருள்களுக்குத் தடை விதித்த முதலாவது நாடாக உருவெடுத்துள்ளது.
- பவளப் பாறைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் ஆக்ஸிபென்சோன், எத்தில் பாராபென், ஆக்டினாக்ஸேட், பியூட்டில் பாராபென் போன்ற 10 பொருட்களை அந்நாடு தடை செய்துள்ளது. இந்தப் பொருட்கள் அழகு சாதனப் பொருட்களில் பயன்படுத்தப் படுகின்றன.
- சூரிய ஒளிக் கதிர்களிடமிருந்துப் பாதுகாப்பு அளிக்கும் பொருள்கள் புற ஊதாக் கதிர்வீச்சை உறிஞ்சி, அவை பவளப் பாறைகளை நிறம் இழக்கச் செய்யும் திறன் கொண்டவையாகும்.

### *பலாவு நாட்டைப் பற்றி*

- பலாவுவில் உள்ள ராக் தீவுகள் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமாக விளங்குகின்றன.
- பிஜிக்குப் பிறகு பாரீஸ் காலநிலை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட இரண்டாவது நாடு பலாவு நாடாகும்.

## துடுப்பு மீன்கள் - அழிவு

- ‘யாங்சி ஆற்றின் பாண்டா’ என்று அழைக்கப்படும் சீன நாட்டின் மாபெரும் துடுப்பு மீன் இனங்கள் அழிந்து விட்டதாக சீனா அறிவித்துள்ளது.
- கடந்த பத்தாண்டுகளாக அதிகப்படியான மீன்பிடித்தல் காரணமாக இந்த இனங்களின் அழிவு ஏற்பட்டுள்ளது.
- யாங்சி நதி மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் கூற்றுப் படி, 2005 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்திலேயே இந்த மீன் இனம் அழிந்து விட்டது.
- செஃபுரஸ் கிளாடியஸ் என்ற அறிவியல் பெயரைக் கொண்ட இந்தத் துடுப்பு மீன் இனமானது 22 அடி (7 மீட்டர்) நீளம் வரை வளரக் கூடியது.
- இந்த மீன் இனம் கடைசியாக 2003 ஆம் ஆண்டில் காணப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## உலகின் 2வது உயரமான வல்லபாய் படேலின் சிலை

- குஜராத்தின் முதல்வரான விஜய் ராம்னிக்லால் ரூபானி உலகின் 2வது உயரமான சிலையான சர்தார் வல்லபாய் படேலின் சிலையை குஜராத்தில் அகமதாபாத்தின் வைஷ்ணவதேவி மையத்திற்கு அருகிலுள்ள சர்தார்தம் வளாகத்தில் திறந்து வைத்தார்.
- 70,000 கிலோகிராம் எடையுள்ள மற்றும் 50 அடி உயரமுள்ள இந்த வெண்கலச் சிலையானது ரூ. 3.25 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.
- உலகின் மிக உயரமான சிலையை வடிவமைத்த ராம் வஞ்சி சுதர் (சிற்பி) உலகின் இரண்டாவது மிக உயரமான இந்தச் சிலையையும் வடிவமைத்துள்ளார்.
- 182 மீட்டர் (597 அடி) உயரம் கொண்ட உலகின் மிக உயரமான சிலையானது (வல்லபாய் படேலின் சிலை) குஜராத்தில் அமைந்துள்ளது.

## லாய் ஹரோபா திருவிழா

- மணிப்பூரி மெய்டி சமூகங்களால் அனுசரிக்கப்படும் லாய் ஹரோபா என்ற ஒரு சடங்குத் திருவிழாவானது திரிபுராவின் அகர்தலாவில் தொடங்கியது.
- ஐந்து நாள் நடைபெறும் இந்தத் திருவிழாவானது வாய்வழி இலக்கியம், இசை, நடனம் மற்றும் சடங்குகள் ஆகியவற்றின் மூலம் கொண்டாடப் படுகின்றது.
- மணிப்பூரிலிருந்து ஒரு கலாச்சாரக் குழுவானது இங்கு வந்து மணிப்புரி தற்காப்புக் கலைகள், நாட்டுப்புற இசை மற்றும் நாட்டுப்புற நடனங்கள் ஆகியவற்றை நிகழ்த்துகின்றது.



## ஒய்எஸ்ஆர் ஆரோக்யஸ்ரீ திட்டம்

- ஏழைகளுக்கு இலவச மருத்துவச் சிகிச்சையை வழங்குவதற்காக ஆந்திர மாநிலமானது “ஒய்எஸ்ஆர் ஆரோக்யஸ்ரீ திட்டத்தை” துவக்கியுள்ளது.
- இந்த திட்டமானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து அம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட இருக்கின்றது.

- புதுப்பிக்கப்பட்ட இந்த சுகாதாரத் திட்டமானது ஆண்டு வருமானம் ரூ. 5 லட்சம் வரை உள்ளவர்களுக்கு இலவச மருத்துவச் சிகிச்சையை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதற்காக, அம்மாநிலம் முழுவதும் 1.42 கோடி ஆரோக்யஸ்ரீ அட்டைகளை கியூஆர் (விரைவு பதிலளிப்பு) குறியீடுகளுடன் அம்மாநில அரசு விநியோகிக்க இருக்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகளாவிய குழந்தை மேதை விருது 2020

- துபாயைச் சேர்ந்த இந்தியச் சிறுமியான சுசேதா சதீஷ் என்பவர் பாடும் பிரிவில் '2020 ஆம் ஆண்டின் 100 நபர்களைக் கொண்ட உலகளாவிய குழந்தை மேதை விருதினை' வென்றுள்ளார்.
- 12 வயது நிரம்பிய இவர் துபாயின் இந்திய துணைத் தூதரக அரங்கில் 2018 ஆம் ஆண்டு ஜனவரியில் 6 மணி நேரம் 15 நிமிடங்களில் 102 வெவ்வேறு மொழிகளில் பாடி தனது இரட்டை உலகச் சாதனையைப் படைத்தார்.
- இவர் தற்போது 120 மொழிகளில் பாடும் திறன் கொண்டு விளங்குகின்றார். இவர் சமீபத்தில் தனது இரண்டாவது பாடல் தொகுப்பான 'யா ஹபிபி' என்பதனை அரபி மொழியில் வெளியிட்டுள்ளார்.

### *உலகளாவிய குழந்தை மேதை விருது*

- நடனம், இசை, கலை, எழுத்து, நடிப்பு, மாடலிங் (விளம்பரத்தில் நடித்தல்), அறிவியல், விளையாட்டு போன்றவற்றில் குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு தளமாக இந்த விருது விளங்குகின்றது.
- இந்த விருதானது டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் சர்வதேச அமைப்பு மற்றும் ஏஆர் ரஹ்மான் ஆகியோரினால் ஆதரிக்கப் படுகின்றது.

# முக்கிய தினங்கள்

## உலக பிரெய்லி தினம் 2020 – ஜனவரி 4

- லூயிஸ் பிரெய்லியின் நினைவாக உலகெங்கிலும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 4 ஆம் தேதியன்று உலக பிரெய்லி தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- லூயிஸ் பிரெய்லி என்பவர் பிரெய்லி எழுத்து முறையைக் கண்டுபிடித்தார். இது பார்வை குறைபாடுள்ளவர்களுக்குப் படிக்கவும் எழுதவும் உதவுகின்றது.
- காட்சிக் குறைபாடு கொண்ட மக்களின் அவலநிலை மற்றும் அதற்கான காரணம் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2019 ஜனவரி 4 ஆம் தேதியன்று முதன்முறையாக உலக பிரெய்லி தினத்தை அதிகாரப்பூர்வமாக அனுசரித்தது.




## இதரச் செய்திகள்

### 2020 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று புதிதாகப் பிறந்த குழந்தைகள்

- யுனிசெஃப் அமைப்பின் (ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம்) தரவின் படி, உலகில் 2020 ஆம் ஆண்டின் தொடக்க நாளில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள், அதாவது 67,385 குழந்தைகள் இந்தியாவில் பிறந்துள்ளனர்.
- இந்தப் பட்டியலில் இந்தியாவிற்கு அடுத்து சீனா, நைஜீரியா, பாகிஸ்தான், இந்தோனேசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் பிறந்துள்ளன.
- உலகம் முழுவதும் மொத்தம் 3,92,078 குழந்தைகள் இந்த நாளில் பிறந்துள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★